
# இயேசுவுடன் வாழ்தல்

பிள்ளைகளாகிய உங்களுக்கு இது ஒரு வழிகாட்டி

புத்தகம் எட்டு **8**

## இணைந்து போராடுதல்



டெபின் கேர்க்

PHILIP

தமிழ் மொழிபெயர்ப்பு திருமதி வசந்தா அரியசிங்கம்

# இயேசுவுடன் வாழ்தல்

8

புத்தகம் எட்டு

பிள்ளைகளாகிய உங்களுக்கு இது ஒரு வழிகாட்டி

## இணைந்து போராடுதல்

டெபின் கேர்க்

கெவின் மேஹியூ

# FIGHTING TOGETHER

First Edition
Copyright 2004 Lanka Philip Mission.
All right reserved.

No part of this publication shall be reproduced or transmitted in any means, electronic, mechanical electronic, including recording photocopying, any retrieval and information storage system without permission in writing from the publisher.

ISBN 955 - 8673 - 46 - 3

Published & Distributed by
**Lanka Philip Mission.**

# இயேசுவுடன் வாழ்தல்

## பிள்ளைகளுக்கான ஒரு வழிகாட்டி

இயேசுவைப் பற்றிய அறிவை பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுக்கும் படி, டெபின் கேர்க் அவர்கள் இப்புத்தகத்தை ஆங்கில மொழியில் எழுதியுள்ளார்.

இது எட்டு புத்தகங்களைக் கொண்டது. அவற்றுள் இது எட்டாவது புத்தகமாகும்.

“பிள்ளையும், பிள்ளையின் விசேஷ தோழன்” என்று இப்புத்தகத்தில் பெயர் சூட்டி இருக்கும் முதியவர் (வேதபாடசலை ஆசிரியை அல்லது ஆசிரியராக இருக்கலாம்) ஆகிய இருவரும் ஒன்று சேர்ந்து கிறிஸ்தவ விசுவாசத்தின் மூலக்கருத்துக்களை ஆராய்ந்து பார்த்தல் இங்கே இடம் பெறுகின்றது. இதன் மூலம் இயேசுவோடு கூட அவர்கள் இருவரும் வைத்துள்ள உறவும், அவர்கள் இருவர் மத்தியில் வைத்துள்ள உறவும் வளர்ச்சி பெறுகின்றது.

கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கிய சிந்தனைகள் மூலம் பிள்ளையைக் குறித்து மிகவும் இலகுவாக விளக்கப்படுத்தியிருப்பதோடு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள வேதவசனங்களின் மூலம், படங்களை நிறந்தீட்டுவதின் மூலம், மனனம் செய்வதின் மூலம் மற்றும் இருவருக்கிடையில் ஏற்படும் சம்பாஷனையின் ஊடாகவும் கிறிஸ்தவ சிந்தனையானது மிகவும் ஆழமாக பிள்ளைகளுக்குள் கிரியை செய்கின்றது.

சீஷர்களை கட்டியெழுப்பும் போது பயன்படுத்தக் கூடிய விதத்தில் முழுமை பெற்ற பாடநெறியாக இப்புத்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ விசுவாசமானது பயிற்சிக்குரிய விதத்தில் கிரியை செலுத்துவதற்கும், இருவரும் சேர்ந்து ஜெபித்து, தேவன் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கின்றார் என்பதை அறிந்து கொள்ளுதல், ஆகியவை இப்புத்தகத்தில் அடங்குகின்றபடியால் பிள்ளைகள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

“இயேசுவுடன் வாழ்தல்” புத்தகத்தினூடாக உங்கள்
ஜீவியத்திலும், உங்கள் உதவியை பெறும் பிள்ளையின் ஜீவியத்திலும்
ஒரு மாறுதல் அடைவதோடு, எமது கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவுக்குள் சகல வழிகளிலும் வளர்ச்சி பெற இது
உங்கள் இருவருக்கும் நல்லதொரு வழிகாட்டி.

# பொருளடக்கம்


பகுதி 1: இணைந்து போராடுதல் - 01


பகுதி 2: உங்களது கவசம் - 07

பகுதி 3: மற்றவர்களைக் காப்பாற்றுதல் - 13

பகுதி 4: பொறுப்பானவர் யார்? - 19

பகுதி 5: கடைசி வரை நிலைத்திருக்கும் இராஜ்யம் - 27

பகுதி 6: அநேக நன்றிகள் - 33

# இணைந்து போராடுதல்

**8**

புத்தகம் எட்டு

எனது பெயர் :- ____________________

எனது நண்பர் :- ____________________

எனது சபை :- ____________________

____________________

____________________

அன்று சந்திப்போம் :- ____________________

____________________

எனது விலாசம் :- ____________________

____________________

____________________

____________________

____________________


# 1

# இணைந்து போராடுதல்



# இணைந்து போராடுதல்

இந்தப்படத்தை நீங்கள் கவனமாகப் பார்க்க வேண்டுமென நான் விரும்புகின்றேன்.



ஒரு சிங்கம் வருவது போல் கற்பனை செய்யுங்கள் - அது முதலில் பிடிக்க முயற்சி செய்யும் மிருகம் எது என்று, வட்டமிட்டுக் காட்டவும்.



**கே**


அந்த ஆட்டைப் பிடிக்குமென நீங்கள் ஏன் எண்ணுகின்றீர்கள்?

________________________________________

________________________________________

> தனியாக நிற்கும் மிருகத்தையே தேர்ந்தெடுக்கும் - ஏனெனில், அதைப் பாதுகாப்பதற்கு, அதைச் சுற்றி வேறு ஒரு மிருகமும் இல்லை.

இப்பொழுது இந்தப்படத்தைப்பாருங்கள்.



இந்த மனிதர்கள் ஒரு ஆயுதப் படை. எதிரி தாக்க வரும் போது, எந்த மனிதனை இலகுவாகத் தாக்கலாம். அவரைச் சுற்றி ஒரு வட்டத்தை வரைக.

**கே**

எதிரி ஏன், அவனைத் தெரிந்து தாக்குவானென நீங்கள் எண்ணுகின்றீர்கள்?

______________________________

எதிரி தனியாக இருப்பவனையே தாக்க முடியும். ஏனெனில், அவனைக் காப்பாற்றுவதற்கு வேறு ஒரு படை வீரனுமில்லை.

இங்கு பார்ப்பதற்கு இன்னும் ஒரு படம் உண்டு.



இந்த மனிதர்கள் கடவுளுடைய இராஜ்யத்தில் இருக்கின்றார்கள்.

சாத்தானால், இலகுவாகத் தாக்கப்படக் கூடியவர் என, நீர் நினைக்கும் மனிதரைச் சுற்றி ஒரு வட்டத்தைக் கீறவும்.

# கே

அந்த மனிதனைத் தான் தாக்குவான் என, ஏன் நீங்கள் எண்ணுகின்றீர்கள்?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________



குழுவின் மற்றவர்களோடு இல்லாமல்
தனித்து நிற்பவனையே சாத்தான்
தாக்குவான். ஏனெனில்,
அவன் மற்றவர்களால்
பாதுகாக்கப்படவில்லை.

**சே** மற்றக் கிறிஸ்தவர்களை உங்களைச் சுற்றி வைத்திருப்பதன் மூலம், சாத்தானின் தாக்குதலிலிருந்து உங்களைப் பாதுகாக்கலாமா என்று நான் அதிசயிக்கின்றேன்.

நாங்கள் கவனித்துப் பார்ப்போம் . . .

நீங்கள் உங்கள் கலக்குழுவிற்கு ஒழுங்காகப் போகின்றீர்களா? ஆம் /இல்லை

நீங்கள் ஒழுங்காகக் கொண்டாட்டங்களுக்கு வருகை தருகின்றீர்களா? ஆம் /இல்லை

உங்களுடைய விசேஷித்த நண்பனைப் போல, கிறிஸ்தவர்களுடன் பின்வருவன பற்றி நீங்கள் கதைப்பதுண்டா . . .

நீங்கள் சந்தோஷப்படும் காரியங்களைக் குறித்து ஆம்/இல்லை

நீங்கள் துக்கப்படும் காரியங்களைக் குறித்து ஆம் /இல்லை

நீங்கள் கிரமமாக உங்களுடைய விசேஷித்த நண்பனை சந்திப்பது உண்டா? ஆம் /இல்லை


நீங்கள் இந்தக் கேள்விகள் எல்லாவற்றிற்குமே "ஆம்" என்று சொல்வீர்களானால், இணைந்து எதிரிகளைத் தாக்கி, ஒருவரை ஒருவர் பாதுகாக்கும் போர் வீரர்களைப் போல; நீங்களும் பாதுகாக்கப்படுவீர்கள்.

**எபிரேயர் 10 : 25இல் கூறப்பட்டுள்ளது.**

"சபை ............................................ சிலர்
.................................... போல, நாமும்
விட்டு விடாமல் ஒருவருக்கொருவர்,
......................................................"

யுத்தங்கள் ஆயுதப்படையினரால் போராடப்படுவதுடன் - உங்கள் கலக்குழு ஒரு போராடும் படையாக சாத்தானிற்கும், அவன் படையினருக்கும் எதிராகப் போராடும்!

# மன்ன வசனம்




• இந்த வசனமே
நீங்கள் இந்த
வாரத்தில் கற்றுக்
கொள்ள வேண்டியது.
நீங்கள் இதைக் கற்று
உங்கள் விசேஷித்த
நண்பருக்குக் கூறலாம் அல்லது
இருவருமாக இணைந்து
கற்கலாம்.

சபை கூடிவருதலை சிலர்
விட்டு விடுகிறது போல, நாமும்
விட்டு விடாமல் ஒருவருக்கொருவர்,
புத்தி சொல்லக்கடவோம்.

எபிரேயர் 10 : 25

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்



| கடமை - 1 | கடமை - 2 | கடமை - 3 | கடமை - 4 |
|---|---|---|---|
| உங்கள் கலக் குழுவில் கிரமமாக வருகை தரும் இருவருடைய பெயர்களை எழுதவும். | பேர், பேராக ஒவ்வொரு - வருக்காகவும் ஜெபிக்கவும். | கிரமமாக வராமல், இந்த விதமாகப் பாதுகாக்கப்படாத இருவருடைய பெயர்களை இப்பொழுது எழுதவும். | பேர், பேராக ஒவ்வொரு - வருக்காகவும் ஜெபிக்கவும். |

நீங்கள் இருவரும் ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள். அல்லது ஒரு படத்தை வரையுங்கள் அல்லது ஒரு பரிசை ஒழுங்கு செய்யுங்கள். (கடமை 3இல் நீங்கள் பெயர் குறிப்பிட்டவர்களில் ஒருவருக்கு)

உங்கள் குறிப்பையோ அல்லது பரிசையோ உங்களோடு எடுத்துச் சென்று, அவர்களைச் சந்திப்பதற்கு ஒரு நேரத்தைத் திட்டமிடுங்கள்.



# 2

# உங்களது கவசம்



# உங்களது கவசம்

ஆயுதப்படையின் ( உங்களது கலக்குழு ) ஒரு பகுதியாகிய, உங்களாலே திறமையாகப் போராடப்பட்ட ஒரு யுத்தத்தைப் பற்றி நாங்கள் இந்தக் கிழமையில் பார்த்தோம்.



**சே**

போர் வீரர்களுக்கு வேறு என்ன தேவை?

யுத்தத்தில் தீர்மானங்களை எடுப்பதற்கு, அவர்களுக்கு ஒரு சேனாதிபதி தேவை.

யார் எங்களுடைய சேனாதிபதி?

இ ....... .......

எதிரியின் நிலை என்ன என்றும், என்ன விதமாக எதிரியோடு சண்டையிட வேண்டுமெனவும் விபரிக்கும்; ஒரு புத்தகம் ஒரு போர் வீரனுக்குத் தேவை.

அந்தப் புத்தகம் என்ன? அந்தப் புத்தகம்

வே ....... க ....... ம்

எனவே . . .

> கடவுளுடைய இராஜ்யத்தில் - நீங்கள் கடவுளின் ஆயுதப்படையில் இருக்கின்றீர்கள். உங்களது சேனாதிபதி - இயேசு.
> உங்களுடன் போர் வீரர்கள் இருக்கின்றார்கள் - உங்களது கலக்குழு.
> உங்களுக்குக் கற்பிப்பதற்கு உங்களுக்கு ஒரு புத்தகம் உண்டு - வேதாகமம்.

ஒரு போர் வீரராக, உங்களுக்கு இன்னும் சில காரியங்கள் தேவை.

**கவசம்!**

கடவுள் எங்களுக்குக் கொடுத்த கவசத்திற்கூடாக, சாத்தான் எங்களை அணுக முடியாது.

ஒரு யுத்தத்தில், எப்பொழுதும் போர் வீரர்கள் ஒருவரோடு, ஒருவர் கதைப்பதற்கு இரகசிய பாஷைகள் வைத்திருப்பார்கள். நான் ஒரு இரகசிய பாஷையை உபயோகிக்கப் போகின்றேன் - ஒரு விகடமாக.



இங்கு கவசத்தின் எந்தப் பகுதி மறைந்திருக்கின்றது என்று உங்களால் செய்து பார்க்க முடியுமா?

┼ = தை　　✕ = ப　　□ = ம்

∧ = ர்　　∟ = த்　　┘ = ட்

┌ = வா　　○ = ய　　◇ = ட

தேவ ┌ ∧ ∟ ┼

பரிசுத்த அவியின் ✕ ┘ ◇ ○ □


நீங்கள் கண்டுபிடித்ததை இங்கு படமாக வரைக . . .

எங்களிடம் அது

கடவுளுடைய வார்த்தையினால், நாங்கள் சாத்தானை எதிர்த்துப் போராட முடியும்! இதை நாம் எபேசியர் 6 : 17இல் காண்கின்றோம்.

தங்களை யார் பாதுகாப்பார்கள் என்று கவலைப்படும் ஆடுகளை,
நீங்கள் எப்பொழுதாவது பார்த்திருக்கின்றீர்களா?

_______________________________




ஆடுகளைப் பாதுகாப்பது யார்?

அதன் ....... ய் ...... ...... .......


எங்களைப் பாதுகாப்பது யார்?

இ ...... .......

சாத்தானோடு போராடுவதற்கு எங்களுக்கு உதவுவதாக, நீங்கள் கதைத்த காரியங்களை இங்கு வரைக.



# மனன வசனம்





**இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணுங்கள்.**

எபேசியர் 6: 17-18

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்

"1. கடந்த வாரத்தில் நீங்கள் செய்த விஜயத்தைப் பற்றிக் கதையுங்கள்."



2. சிறிய விகடமாக இருங்கள் - இது ஒரு இரகசிய பாஷை :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | |
| ✡ | ✢ | ✦ | ✪ | ✲ | |
| F | G | H | I | J | K |
| ● | ✓ | ■ | × | ▲ | ❖ |
| L | M | N | O | P | |
| ✖ | ✙ | ✇ | † | ✏ | |
| Q | R | S | T | U | |
| ❀ | ◗ | ◆ | ✈ | ✿ | |
| V | W | X | Y | Z | |
| ✳ | ✚ | Φ | θ | δ | |

3. ஒருவருக்கு, ஒருவர் இரகசிய பாஷையில் ஒரு குறிப்பை எழுதுங்கள்.

4. இப்பொழுது கடதாசிகளை மாற்றி எடுத்து இரகசிய பாஷையைச் செய்து பாருங்கள்.

# 3

# மற்றவர்களைக் காப்பாற்றுதல்



# மற்றவர்களைக் காப்பாற்றுதல்



## கடவுளின் இராஜ்யம்

### சாத்தான் தோற்கடிக்கப்பட்டான்.

இயேசு மரித்த போது, சாத்தானை அவர் தோற்கடித்ததுடன்; யாவரும் கடவுளுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு வழியமைத்தார்.

இதைப் பற்றியே சாத்தான் பைத்தியமாக இருக்கின்றான்! நாங்கள் இயேசுவுக்காக மற்றவர்களை ஆதாயப்படுத்துவதைத் தடுப்பதற்கு, எதிரான சகல காரியங்களையும் சாத்தான் செய்கின்றான்.

**லூாக்கா 10 : 1 -2ஐ வாசிக்கவும்.**

நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் இயேசு தனது சீஷர்களை அனுப்பினார்.



அவர் எத்தனை பேரை அனுப்பினார்? ______________________

அவர்களை, அநேக மக்களுக்குத் தேவை என்று சொன்னார்.


மக்கள் விளைச்சலைப் போல் இருப்பதுடன், அவர்களை அறுவடை செய்வதற்குச் சில பணியாளர்களே இருக்கின்றார்கள்.

மக்களைத் தனக்காக ஆதாயப்படுத்துவதற்கு இயேசுவிற்குப் பணியாளர்கள் தேவை.

**கே**

கடவுளுடைய இராஜ்யத்திற்குள் கொண்டு வருவதற்காக நீங்கள் எந்த மக்களை நேசித்து, அவர்களுக்காக ஜெபிக்கின்றீர்கள் ?

______________________



சாத்தான் உங்களைத் தடுப்பதற்கு இடம் கொடாதீர்கள். அவன் முயற்சி செய்து உபயோகிப்பதற்கான சில ஆயுதங்கள் இவை.

வெட்கப்படுதல்

சோம்பல்தனம்

தர்க்கங்கள்

பொறாமை

மூர்க்கத்தனம்

கடவுளுடைய இராஜ்யத்திற்குள் நீங்கள் மற்றவர்களைக் கொண்டுவராமல் தடை செய்வதற்கு, அவன் உபயோகிக்கும் வேறு ஆயுதங்கள் ஏதாவது உண்டா?

**திருப்பிப் போராடுவதை நினைவில் வைத்திருங்கள்!**

உங்களுடைய உள்ளத்தில் இயேசு சொல்வதற்குச் செவி கொடுங்கள். உங்களுடைய ஆவியில், உங்கள் பட்டயத்தை உபயோகியுங்கள் - கடவுளுடைய வார்த்தை.

“போ” என்று இயேசு சொல்லுகின்றார்!

உங்கள் வேதாகமத்தைத் திறவுங்கள்

**ரோமர் 8: 38- 39ஐ வாசிக்கவும்.**

இந்த வசனங்களை நீங்கள் வாசித்தவுடன், இந்தக் கேள்வியைப் பற்றி சிந்தியுங்கள்.

இவை ஏதாவது நம்மை இயேசுவிடமிருந்து பிரிக்குமா?

மரணம்
வாழ்வு
ஏதாவது வல்லமை
சிருஷ்டிக்கப்பட்ட ஏதாவது
எதிர் காலம்
நிகழ் காலம்
தேவதூதர்கள்
ஆழம்
உயரம்
பேய்கள்


ஆம் / இல்லை



உங்களைக் கடவுளின்
அன்பிலிருந்து எதுவும் பிரிக்க

**முடியாது !**

# மனன வசனம்





மரணமானாலும், ஜீவனானாலும்,
தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும்,
வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும்,
வருங்காரியங்களானாலும், உயர்வானாலும்,
தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும்
நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள
தேவனுடைய அன்பை விட்டு நம்மை
பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கின்றேன்.

ரோமர் 8 : 38 - 39


# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்

1. இந்த உலகப் படத்தைப் பாருங்கள்.





2. ஒவ்வொருவரும், ஒரு நாட்டைத் தெரிவு செய்யுங்கள் - நீங்கள் விஜயம் செய்த ஒரு நாடு.



3. இணைந்து அந்த நாடுகளைப் பற்றிக் கதையுங்கள்.



4. அந்த நாடுகளுக்காக இருவரும் ஜெபியுங்கள்.



5. உங்களுக்கு அந்த நாடுகளில் யாரையாவது தெரியுமானால், நீங்கள் அவர்களுக்காக ஜெபித்ததாக அவர்களுக்கு இருவரும் கடிதங்களை எழுதுங்கள்.

# 4

# பொறுப்பானவர் யார்?



# பொறுப்பானவர் யார்?

நான் உங்களுக்காக ஒரு நாடகம் வைத்திருக்கின்றேன். உமது விசேஷித்த நண்பனுடனும், வேறு இருவருடனும் சேர்ந்து இதை வாசிக்கவும்.

ஒரு கதை சொல்பவர் சாத்தான் இயேசு பரிசுத்த ஆவி

இயேசு : ( சில மனிதர்களைப் பார்த்த வண்ணம் )

உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபமாயிருக்கிறது!

சாத்தான் :

ஆ, வேண்டாம்! நீங்கள் அதைக் கேட்பீர்களா? தன்னுடைய இராஜ்யத்தைப் பூமியில் வைத்திருப்பதற்காக இயேசு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றார்.
நான் தான் இங்கு பொறுப்பு என்று, நான் நினைக்கின்றேன்.
நான் வனாந்தரத்திற்குச் சென்று இதற்காக ஏதாவது செய்யப் போகின்றேன்.

பரிசுத்த ஆவி :

இயேசுவே, நீர் வனாந்தரத்திற்குப் போய் சாத்தானை சந்திக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன். நீர் அவனோடு தாக்குப் பிடிப்பீரென நான் அறிவேன்.

சாத்தான் : ( வனாந்தரத்தில் )

ஆஹா, இதோ வருகின்றார் இயேசு - கடவுளைப் பற்றி மக்கள் நினைக்காதவாறு தடை செய்யும் எனது தூதர்களையும், எனது இராஜ்யம் முழுவதையும் அவருக்குக் காட்டுவேன்.

இயேசுவே, இந்த இராஜ்யங்கள் எல்லாவற்றையும் நீர் காண்கின்றீரா?

இயேசு :

ஆம்.

சாத்தான் :

நீர் என்னைப் பணிந்து கொண்டால், நான் இவற்றை உமக்குத் தருவேன் நீர் ஆளலாம். அது உம்மை எவ்வளவு அதிசயமாக உணரச் செய்யும்!

( தனக்குள் )
இயேசுவே என்னைப் பணிந்து கொண்டால் அது எனக்குப் பெரிய முக்கியத்துவத்தைத் தருவதுடன், என்னை வெற்றியாளனாக ஆக்கும் என்பதால், நான் எனது இராஜ்யங்களைப் பற்றிக் கரிசனை காட்டப் போவதில்லை.



இயேசு :

இல்லை சாத்தானே, உனது தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு; அவருக்கே ஊழியம் செய் என்று கடவுள் சொல்லுகின்றார். நான் ஒரு போதும் நீ சொல்வதைச் செய்யப் போவதில்லை.

கதை சொல்பவர் :

இயேசுவை முதன்மையான இடத்தில் வைப்பதற்கு, ஏதாவது காரியம் தடையாக உள்ளதா?
அப்படியானால், அக்காரியம் ஏன் இயேசுவை விட முக்கியமாகவுள்ளது?

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

இறுதியில் அந்தக் கேள்விக்கு உங்கள் பதில் என்னவாக இருக்குமென அதிசயிக்கின்றேன்.

## இயேசுவையே முதலாவதாக வைப்பதை, தடை செய்யும் காரியம் ஏதாவது உமக்குண்டா?


சில நொடி நேரம் நீர் இதைப் பற்றி சிந்திக்கலாம். பின்பு உமது பதிலை எழுதவும். ____________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________

எங்களுக்கும், இயேசுவிற்கும் இடையில் வரும் ஒரு காரியம் ஒரு விக்கிரகமாக இருப்பதுடன், அதை சாத்தான் பல வித்தியாசமான வழிகளில் உபயோகிப்பான்.

நாங்கள் இயேசுவிற்கு சரியான முறையில் செவி கொடுப்பதை இது தடை செய்வதுடன், சாத்தான் இதைத் தனது ஆயுதங்களில் ஒன்றாக உபயோகிக்கலாம்.

இது இப்படி இருக்கிறது :

## கடவுள் பேசுகின்றார்







அது மிகவும் கவலை என நான் நினைக்கின்றேன்.

சாத்தான் வெற்றி பெறுவதை நாங்கள் விரும்பவில்லை, அப்படித்தானே?


எனவே, இயேசுவிடமிருந்து எங்களை எதுவும் பிரிக்க முடியாது என்ற நிட்சயத்தை நாங்கள் பெற வேண்டும்.

**பரிசுத்த ஆவியின் வல்லமையோடு இடைப்படுவோமானால், அந்த வல்லமையை விட வேறு ஒன்றுமில்லை என்று இயேசு சொன்னார்.**



சாத்தானுடைய இராஜ்யங்களை அழிக்கும்,

## கடவுளுடைய இராஜ்யம்



சாத்தான் வெற்றி கொள்ள முடியாதபடி இயேசு எங்களுக்கு கவசத்தைக் கொடுத்திருக்கின்றார்.

சாத்தானின் தாக்குதல்கள் தொடர்ச்சியாக இருக்கும். ஆனாலும், நாம்

**வெற்றி கொள்ளுகின்ற பக்கத்தில்**

இருக்கின்றோம்.

நீங்கள் வாசிக்க வேண்டுமென நான் விரும்புகின்றேன்.

**ரோமர் 8 : 38 - 39ஐ வாசிக்கவும்.**

மறுபடி நாங்கள் எப்பொழுதும் அறிந்திருக்க வேண்டுமென்பதால்,

**எங்களுடைய கடவுள் எவ்வளவு பெரியவர், பரிசுத்த ஆவி எவ்வளவு வல்லமை உள்ளது! என்பதை நாம் எப்பொழுதும் அறிந்திருக்க வேண்டும்.**

அடுத்த பக்கத்தில், நான் வசனத்தை எழுதிவிட்டு
நீங்கள் படம் வரையவோ அல்லது அடையாளத்தைப் பெட்டியில்
இடவோ ஒரு இடத்தை விடுகின்றேன். . .

நான் நிட்சயித்திருக்கின்றேன். (உண்மையாகவே நிட்சயம்)

மரணமில்லை

ஜீவனுமில்லை

தேவதூதர்களும் இல்லை

பிசாசுகளும் இல்லை

நிகழ் காலமுமில்லை

எதிர் காலமுமில்லை

வேறு எந்த

வல்லமைகளுமில்லை

உயரமுமில்லை

ஆழமுமில்லை


வேறு எதுவுமில்லை

வேறு எந்த

சிருஷ்டிப்பிலும்

எங்களைக் கடவுளுடைய அன்பிலிருந்து பிரிக்க முடியாது.

# மனன வசனம்



இந்த வசனமே நீங்கள் இந்த வாரத்தில் கற்றுக் கொள்ள வேண்டியது. நீங்கள் இதைக் கற்று உங்கள் விசேஷித்த நணபருக்குக் கூறலாம் அல்லது இருவருமாக இணைந்து கற்கலாம்.

மரணமானாலும், ஜீவனானாலும்,
தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும்,
வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும்,
வருங்காரியங்களானாலும், உயர்வானாலும்,
தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும்
நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள
தேவனுடைய அன்பை விட்டு நம்மை
பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கின்றேன்.

ரோமர் 8 : 38 - 39

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்

1. இயேசுவினுடைய அன்பிலிருந்து அவர்கள் பிரிக்கப்பட்டதான, ஒரு சோதனை வந்த வேளையைப் பற்றி உங்களுடைய விசேஷித்த நண்பனிடம் கேட்கவும்.



2. இயேசு அவர்களை நேசிப்பதை, அவர்கள் என்ன விதமாக அறிந்து கொண்டார்கள் என்று சொல்லும் படி உங்கள் விசேஷித்த நண்பனிடம் இப்பொழுது கேளுங்கள்.

3. இயேசு உங்களை என்ன விதமாக நேசிக்கின்றாரென்று, உங்களுடைய விசேஷித்த நண்பனுக்குச் சொல்லுங்கள்.

4. அவரது அன்பிற்காக, இயேசுவிற்கு இணைந்து நன்றி சொல்லுங்கள்.

5. உங்களுடைய சபைக்கு யாரைக் கடவுள் தலையாகப் நியமித்திருக்கின்றார்? (போதகர், பிரதி குரு, முதியோர்)

அவர்களை ஊக்குவிப்பதும், அவர்களுக்கு அன்பைக் காட்டுவதும் நல்லது.

இந்த வாரத்தில் நீங்கள் இருவருமாக சேர்ந்து அவர்களை நேசிப்பதையும், மதிப்பதையும் எடுத்துக் காட்டுவதற்கு ஒரு வழியைப் பற்றி யோசித்துப் பாருங்கள்.

# 5

# கடைசி வரை நிலைத்திருக்கும் இராஜ்யம்




# கடைசி வரை நிலைத்திருக்கும் இராஜ்யம்

இயேசுவே வெற்றியாளராக இருப்பதுடன், நாம் அவருடைய இராஜ்யத்தில் ஜீவிப்பது எங்களையும் வெற்றியாளர்களாக்கும் என; கடந்த பகுதியில் நாங்கள் பார்த்தோம். ஒரு நாள் இயேசு திரும்பவும் இந்த உலகத்திற்கு வந்து,

## இரஜாக்களின் இராஜாவாக

இருப்பதுடன், சாத்தானின் கட்டுப்பாட்டின் கீழுள்ள இராஜ்யங்கள் எல்லாம் அழிக்கப்படும்.




சாத்தானுடைய கட்டுப்பாட்டின் கீழுள்ள இராஜ்யங்கள்

**தானியேல் 2 : 44ஐ வாசிக்கவும்.**

கடவுளுடைய இராஜ்யம் ............................ வரை நீடித்திருக்கும் (கடைசி)

இது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?

நீங்கள் கடவுளுடைய இராஜ்யத்தில்
இருப்பதுடன்,
இயேசு உங்களில் இருப்பதால்
கடவுளுடைய இராஜ்யம் உங்களில்
இருக்கின்றது.

லூாக்கா 17 : 21

எனவே, நீங்கள் மிகவும் விசேஷமானவர். நீங்கள் இராஜாக்களின் இராஜாவாக இராஜ்யத்தில் இருப்பதுடன், எப்பொழுதும் நிலைத்திருக்கும் இராஜ்யத்திலும் இருக்கின்றீர்கள்.



விக்கிரகங்களை வணங்குகின்ற மக்களை அல்லது கல், பேப்பர் அல்லது மரத்தால் செய்யப்பட்ட கடவுளை வணங்குகின்ற மக்களை எப்பொழுதாவது நீங்கள் கண்டதுண்டா?

ஆம்/இல்லை

அதை உங்களால் செய்ய முடியுமா? ஆம்/இல்லை

இல்லை, நாங்கள் இயேசுவை விட வேறு ஒருவரையும் வணங்க மாட்டோம், அப்படித் தானே? ஆம்/இல்லை

இப்படியான விக்கிரகங்களைப் பற்றி நாங்கள் நினைக்கும் பொழுது, "இல்லை" என்று சொல்வது இலகு. ஆனால், இயேசுவை விட முக்கியத்துவம் கொடுக்கப்படும் எந்தப் பொருளும் விக்கிரகமே.

விளையாட்டுப் பொருட்கள் - தொலைக்காட்சிப் பெட்டி - ஈட்டிகள் - புத்தகங்கள் - படங்கள் - கணனிகள் - விளையாட்டுப் போட்டி - விளையாட்டு - விடுதலைகள் - பணம் - நண்பர்கள்.

இவற்றில் ஏதாவது, விக்கிரகமாகலாம்.



இயேசுவை விட மிக முக்கியமான, ஏதாவது உங்களுக்கு உண்டென்று எண்ணுகின்றீர்களா? ஆம் /இல்லை

"ஆம்" என்று சொல்வீர்களானால், அது என்ன?

________________________________________

________________________________________

இதைப் பற்றி உங்கள் விசேஷித்த நண்பனுடன் கதையுங்கள்.

கடவுளுடைய இராஜ்யத்திற்குச் சொந்தமாயிருப்பதை விட, எதுவும் முக்கியமானதல்ல என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.



**இராஜாக்களின் இராஜாவான இயேசு ஆளுகை செய்கின்ற, கடவுளுடைய இராஜ்யம் என்றும் நிலைத்திருக்கும்!**

மரணம், பாவம், நோய், மற்றும் எல்லாக் காரியங்களுக்கும்
மேலான போராட்டத்தில் சாத்தான் தோல்வியடைந்தான்.


இயேசு மரித்து, மரணத்திலிருந்து எழுந்து வெற்றி சிறந்தார்.

இப்பொழுது உங்களுக்கும், எனக்கும் ஒரு இடம் காத்திருக்கின்றது.

இது பற்றி, வெளிப்படுத்தின சுவிசேஷம் 21 : 3 - 4ஐ வாசிக்கவும்.

அதன் பின்பு நீங்கள் இருவரும், பரலோகம் எதைப் போல
இருக்குமென எண்ணுகின்றீர்களோ; அதை
எழுதுங்கள் அல்லது படமாக வரையுங்கள்.

# மனன வசனம்



இந்த வசனமே நீங்கள் இந்த வாரத்தில் கற்றுக் கொள்ள வேண்டியது. நீங்கள் இதைக் கற்று உங்கள் விசேஷித்த நண்பருக்குக் கூறலாம் அல்லது இருவருமாக இணைந்து

அந்த இராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்.

தானியேல் 2 : 44

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்

1. உங்கள் சபையில், பொறுப்பானவருக்கு என்ன விதமாக அன்பைக் கட்டினீர்கள் என்று கதையுங்கள். அவர்களுக்காக இணைந்து ஜெபியுங்கள்.



2. உங்களுடைய நாட்டிற்கு ஒரு கொடி இருக்கின்றது.

இதை உங்களால் வரைய முடியுமா?

ஒரு கொடி செய்வதில் இப்பொழுது சிறிது விநோதமாக இருப்போம். *கடவுளுடைய இராஜ்யத்திற்கு* ஒரு கொடியும் இல்லை.

கொடி ஒன்றை வரைவது உங்களுக்கு விநோதமாக இருக்குமென நான் எண்ணுகின்றேன்.

கவனமாக யோசித்து, ஒவ்வொருவரும் *கடவுளுடைய இராஜ்யத்திற்கு* ஒரு கொடியை வரையுங்கள்.

கடவுளுடைய இராஜ்யத்திற்கான நிறங்கள் பற்றி யோசியுங்கள்.

கடவுளுடைய இராஜ்யத்திற்கான அடையாளங்கள் அல்லது அமைப்புக்கள் பற்றி யோசியுங்கள்.

நீங்கள் செய்த கொடியைப் பற்றியும், நீங்கள் ஏன் அந்த நிறங்களையும், அந்த அமைப்புக்களையும் தெரிவு செய்தீர்களெனவும் ஒருவருடன் ஒருவர் கதையுங்கள்.

# 6

# அநேக நன்றிகள்



# அநேக நன்றிகள்

வெற்றி பெறும் பக்கத்தில் இருப்பது பற்றியும், மற்றவர்களை வெற்றி பெறும் பக்கத்திற்குக் கொண்டு வருவது பற்றியும் கடந்த பகுதியில் நாம் பார்த்து முடித்து விட்டோம்.
ஞாபகமிருக்கிறதா?

இயேசு மரித்த போது, சாத்தான் தோல்வியடைந்தமையால்; கடவுளின் இராஜ்யத்தில் நாங்கள் எல்லோரும் வெற்றி பெற்றவர்களாக இருக்கின்றோம்.

இயேசுவிற்கு நன்றி சொல்வதற்கு எங்களுக்கு அநேக காரியங்கள் உண்டு, அவருக்கு நன்றி சொல்வது மிகவும் நல்லது. எனவே, நீங்கள் இருவரும் இந்தப் புத்தகத்தை அநேக நன்றிகளுடன் முடியுங்கள்.

இயேசுவே, பின்வருவனவற்றிற்காக நாங்கள் உமக்கு நன்றி சொல்ல விரும்புகின்றோம்.

மக்களுக்கு நன்றி சொல்வதும் நல்லது. உங்களுக்கு அநேக உதவிகளைச் செய்த உங்கள் விசேஷித்த நண்பனுக்கு நன்றி சொல்லும் ஒரு சிறிய குறிப்பை நீங்கள் எழுத வேண்டுமென நான் விரும்புகின்றேன். நீங்கள் இதைச் செய்யும் பொழுது, அவர்களை அறையை விட்டு வெளியே போகும்படி அல்லது அவர்களுடைய கண்களை மூடும்படி சொல்லுங்கள். பின்பு, உங்கள் கடித்தை அவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்.

அன்பான .........................



இயேசுவிற்கு, அவருடைய அன்பிற்காக நன்றி சொல்லி; ஒவ்வொருவரும் ஒவ்வொரு கடிதத்தை எழுதுங்கள். பின்பு அவர் என்ன சொல்லுகின்றார் என்று கேளுங்கள்.

<u>உங்களுடைய கடிதம்</u>

அன்பான இயேசுவே,

______________________________

______________________________

______________________________

______________________________

அன்புடன் ......................................

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அன்பான .........................................., (உங்களுடைய பெயரை எழுதுங்கள்)

______________________________

______________________________

______________________________

அன்புடன் இயேசு.

<u>உங்களுடைய விசேஷித்த நண்பனுடைய கடிதம்</u>

அன்பான இயேசுவே,

______________________________

______________________________

______________________________

______________________________

அன்புடன் ......................................

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அன்பான .........................................., (உங்களுடைய பெயரை எழுதுங்கள்)


______________________________

______________________________

______________________________

அன்புடன் இயேசு.

# மனன வசனம்




**கர்த்தர் தம்மில் அன்பு கூறுகின்ற யாவரையும் காப்பாற்றுவார்.**

சங்கீதம் 145 : 20

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்



பின்வரும் வசனங்களைப் பற்றிக் கவனமாகச் சிந்தித்து, அவற்றை நீங்கள் இருவரும் இணைந்து நிரப்ப வேண்டுமென நான் விரும்புகின்றேன் :

| உங்களுடைய விசேஷ நண்பன் | நீங்கள் |
|---|---|
| இயேசுவுடன் வாழ்தல் புத்தகங்கள் ______ என நான் நினைக்கின்றேன். | இயேசுவுடன் வாழ்தல் புத்தகங்கள் ______ என நான் நினைக்கின்றேன். |
| நான் அவற்றை வாசித்துக் கொண்டு போகும் பொழுது, எனது வாழ்க்கை மாற்றமடைந்தது. ஏனென்றால், ______ | நான் அவற்றை வாசித்துக் கொண்டு போகும் பொழுது, எனது வாழ்க்கை மாற்றமடைந்தது. ஏனென்றால், ______ |
| என்னால் இன்னும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. ______ | என்னால் இன்னும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. ______ |
| எனக்குத் தெரியும் நான் இன்னமும் ______ | எனக்குத் தெரியும் நான் இன்னமும் ______ |

*உங்களுடைய பதில்களைப் பற்றி நீங்கள் இணைந்து கதைக்கலாம். மேலும், இந்தப் புத்தகங்கள் என்ன விதமாக உங்களுக்கு உதவியது என்று, நீங்கள் இருவரும் எனக்கு எழுதலாம். உங்களுடைய கடிதங்களைப் பெற்றுக்கொள்ள எனக்கு ஆசை.*




நான் உங்கள் அனைவரையும் நேசிக்கின்றேன்.

இந்தப்புத்தகத்திலிருந்து உங்களுக்கு விருப்பமான வசனத்தை இவ்விடத்தில் எழுதுங்கள்.

இந்த புத்தகத்திலிருந்து உங்களுக்கு ஏதாவது
கேள்விகள் இருந்தால், உங்கள் விசேஷித்த நண்பனிடம்
கேட்பதற்காக அவற்றை இங்கு எழுதுங்கள்.



# FIGHTING TOGETHER

First Edition

Copyright 2004 Lanka Philip Mission.
All right reserved.

No part of this publication shall be reproduced, transmitted in any means, electronic, mechanical, electronic, including recording photocopying, any retrieval and information storage system without permission in writing from the publisher.

ISBN 955 - 8673 - 4

Published & Distributed by
Lanka Philip Mission

# இயேசுவுடன் வாழ்தல்

புத்தகம் 1: கடவுளுடைய குடும்பத்திற்குள்வரவேற்கின்றோம்

புத்தகம் 2: விசேஷ நேரங்களும்,ஈவுகளும்.

புத்தகம் 3: பேசுதலும்,கேட்டலும்.

புத்தகம் 4: என் மீதுள்ள அன்பும், மற்றவர்கள்மீதுள்ள அன்பும்.

புத்தகம் 5: பலமான பற்றுதல்கள்.

புத்தகம் 6: நாம் எதைத் தெரிவு செய்கின்றோம்?

புத்தகம் 7: விசுவாசம் வைத்தல்.

புத்தகம் 8: இணைந்துபோராடுதல்.

வேதாகமப் பகுதிகள், சொல் கண்டு பிடித்தல், வர்ணம் தீட்டுதல், மனன வசனங்கள், அதற்கும் மேலாக பெரியவர்கள் சிறியவர்கள் மத்தியில் பகிர்ந்து கொள்ளுதல் போன்றவற்றிற்கூடாக கொள்கைகள் இலகுவான முறையில் விளக்கப்படுத்தப்பட்டும், பலப்படுத்தப்பட்டும் உள்ளன. ஒவ்வொரு பகுதியும் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளன.

ஒரு தொனிப்பொருள் தலைப்பு.

விளக்கங்களும், நடவடிக்கைகளும்.

ஒரு மனன வசனம்.

மேலும் இணைந்து பகிர்ந்து கொள்ளுவதற்கு ஏதுவாக தெளிவாகத் தயார் செய்யப்பட்டதும், இலகுவாகப் பின்பற்றக் கூடியதுமான ஆலோசனைகள்.

விசுவாசத்தை நடைமுறைப்படுத்தவும், இணைந்து ஜெபித்தலை ஊக்குவிக்கவும், கடவுள் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தவும் ஏற்ற ஆலோசனைகளுடன் கூடிய, இந்த எட்டுப் புத்தகங்கள், ஒரு பூரண சீஷத்துவப் பயிற்சியை உருவாக்குகின்றன.

தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாக் காரியங்களிலும் வளருவதற்கு, கிறிஸ்துவுடன் வாழ்தல் உங்கள் இருவரிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், உதவவும் செய்யும்.

அத்துடன் டப்னி கேர்க்கின்

வாரிசுகள் இணைந்து தலைமுறைகள் மத்தியிலான கலச் சபையை ஸ்தாபித்திருக்கின்றார்கள்.

ஆதரிப்பவரும்,பிள்ளையும் இப்பிரதிகளில் இருந்து பல நல்லவற்றைப் பெற்றுக் கொண்டு, பெறுமதியான ஆதரிப்பை வளங்குவதை உறுதி செய்கின்றது.

ஒரு பிள்ளை ஞானஸ்நானம் பெறவேண்டுமெனக் கேட்கும் பொழுது, இது குருமாருக்கும், கலத்தலைவர்களுக்கும், ஆதரிப்பவர்களுக்கும் கையேடாக இருக்கின்றது.

கையோடு கை சேர்த்து, இயேசுவுடன் வாழ்தல் மூலம் ஒரு பிள்ளையை ஆதரிக்கின்றார்கள்.

Thanks to Members of the Korean Methodist Church South Annual Conference who sponsored this book for printing. So that we make this book available at reduced cost. Their contribution is gratefully appreciated.



**LANKA PHILIP MISSION**
32/6,1/2, Averihena Road,
Polhengoda,Colombo 05
Sri Lanka.
Tel : 2818095

ISBN 955-8673-46-3

Rs.40/=